**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.STC.No.2282/2019**

**வழக்கு சாட்சி.அ.சா.9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரோஜினி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | லட்சுமணன் | வயது | : | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |

(வழக்கின் எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2025**

முதல் விசாரணை

நான் தற்போது W16 அனைத்து மகளிர் காவல் நிலையம் புளியந்தோப்பு, சென்னையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 05.02.2018-ம் தேதி நான் தாலுக்கா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, தாலுக்கா காவல் நிலைய தலைமை காவலர் சிவக்குமார் என்பவர் நிலைய குற்ற எண்.60/2018 சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(i) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் 06.02.2018-ம் தேதி 08.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் சேகர், தினகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.**8** ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**9** ஆகவும் குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் காலை 09.00 மணிக்கு எதிரிகள் குற்ற செயலுக்கு பயன்படுத்திய சுமார் 65 செ.மீ நீளமுள்ள குச்சி ஒன்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் கனகராஜ், காஞ்சனா, புஷ்பாவதி, தினேஷ், மாலதி ரஜேந்திரன், சரண்யா, தினகரன், சேகர் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகள் தமிழ்செல்வி, சுரேஷ், சக்கரவர்த்தி ஆகியோர்கள் 09.02.2018-ம் தேதி நிலையம் ஆஜரானவர்களை கைது செய்வதற்கான காரணம் கூறி கைது செய்து, தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் சம்பவத்தில் காயமடைந்த கனகராஜ், காஞ்சனா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை மருத்துவர் கோமதி என்பவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று, தாக்கல் செய்தேன். கனகராஜ் என்பவரின் காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காஞ்சனா என்பவரின் காயச்சான்றிதழ் அ**.**சா**.**ஆ**.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கைப்பற்றப்பட்ட பொருளுக்கு படிவம் 91 தயார் செய்து, கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் **91** அ**.**சா**.**ஆ**.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் தமிழ்செல்வி, சுரேஷ்சக்கரவர்த்தி ஆகியோர்கள் மீது 12.02.2018-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து, கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் அரசு தரப்பு சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால், சரியல்ல. நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றால், சரியல்ல. சம்பவத்திற்கு பின்னிட்டு எதிரிகளுக்கும், வாதிக்கும் இடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளதை பற்றி தெரிந்து கொண்டீர்களா என்றால், தெரிந்து கொண்டேன். சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரிகள் மீது பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால், சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருளுக்கும், எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. நீங்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால், சரியல்ல.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.